## செய்தி அறிக்கை

கடலூர் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவும், கடலூர் மாவட்ட நிர்வாகமும் இணைந்து எதிர் வரும் 27-03-2018 செவ்வாய்க்கிழமை அன்று கடலூர் டவுன்ஹாலில் பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான புதிய வடிவிலான சட்ட விழிப்புணர்வு முகாம் ஒன்றினை நடத்திட உள்ளது. இந்த முகாமில் மாவட்ட நிர்வாகத்தின் கீழ் இயங்கும் துறைகளின் சார்பாக பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக மாநில அரசு மற்றும மத்திய அரசுகளினால் செயல்படுத்தப்படும் நலத்திட்டங்கள் பற்றிய விளக்கங்கள், நலத்திட்டங்கள் பெறுவதற்கான தகுதிகள், நலத்திட்டங்கள் தொடர்பான நடைமுறைகள் பற்றி அறிந்து கொள்ள பொதுமக்களின் வசதிக்காகவும் நலத்திட்டங்களை பற்றிய விழிப்புணர்வு பெறுவது தொடர்பாகவும் அந்தந்த துறைகளின் சார்பாக விழிப்புணர்வு முகாமில் ஸ்டால்களும் அமைக்கப்படவுள்ளது. அந்த ஸ்டால்கள் அனைத்தையும் பொதுமக்கள் அனைவரும் காலை 11.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை சட்ட விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டு பார்வையிடலாம். அத்துடன், பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக சிறப்பு ஏற்பாடாக வாக்காளர் அடையாள அட்டை, ஆதார் அட்டை மற்றும் குடும்ப அட்டை ஆகியவற்றை பெறுவதற்கும், மேலும் மேற்சொன்ன அட்டைகளில் திருத்தங்கள் செய்வதற்கும் உரிய துறைகளின் ஸ்டால்களில் சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன. மேலும், அன்று மாலை 04.30 மணியளவில் டவுன்ஹால் கூட்ட அரங்கில் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் சார்பாக பெண்கள் மற்றும் குழந்தைகள் தொடர்பான சட்ட விழிப்புணர்வு முகாமும், மாவட்ட நிர்வாகத்தின் சார்பாக நலத்திட்டங்கள் தொடர்பான அறிக்கை சமர்ப்பித்தலும் நடைபெறும். இந்நிகழ்வில் கடலூர் மாவட்ட முதன்மை நீதிபதி அவர்களும், மாவட்ட ஆட்சியர் அவர்களும், நீதிபதிகள், வழக்கறிஞர்கள் மற்றும் அரசுத்துறை அதிகாரிகள் ஆகியோர்கள் கலந்து கொள்ள இருக்கிறார்கள். கடலூர் மாவட்ட பொதுமக்கள் அனைவரும் இந்த புதிய வடிவிலான சட்ட விழிப்புணர்வு முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மாவட்ட ஆட்சியர்,
கடலூர் மாவட்டம்,
கடலூர்.
23-03-2018

தலைவர்/முதன்மை மாவட்ட நீதிபதி,
மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழு,
கடலூர்.
23-03-2018.